# பேச்சுப் போட்டியில் வாய்மொழித் தொடர்பாடல் பகுதி

## புகுநிலை வகுப்பு - மாதிரி வினாக்கள்

கேள்விகள் பேச்சு வழக்கில் கேட்கப்படும். உ+ம்: "உங்கட பேர் என்ன?". மாணவர்கள் கேள்வியை விளங்கிக் கொள்ளாதவிடத்து, ஒத்த சொற்களைப் பயன்படுத்தியோ அல்லது எழுத்து வழக்கிலோ கேள்விகள் கேட்கப்படும். உ+ம்: கூறுங்கள் = சொல்லுங்கள் / மிருகம் = விலங்கு.

1. வணக்கம். உங்கள் பெயர் என்ன?
   எந்தப் பாடசாலையில் படிக்கின்றீர்கள்?

2. உங்களுக்கு விருப்பமான ஒருவரைப் பற்றிக் கூறுங்கள்?
   அவரை ஏன் உங்களுக்குப் பிடிக்கும்?

3. நீங்கள் எப்படிக் காலையில் பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமாவீர்கள் (வெளிக்கிடுவீர்கள்) என்பது பற்றிச் சொல்லுங்கள்? (காலையில் எழும்பியதில் தொடங்கி).

4. நீங்கள் என்ன உணவு வகைளை (உணவுகளை) உண்பீர்கள்?

5. பிறருக்கு (மற்றவர்களுக்கு) உதவி செய்திருக்கின்றீர்களா?
   நீங்கள் அவ்வாறு செய்த உதவி பற்றிக் கூறுங்கள்?

6. உங்கள் நண்பரின் பெயர் என்ன?
   நீங்கள் நண்பர்களுடன் என்ன விளையாடுவீர்கள்?
   இந்த விளையாட்டுப் பற்றிக் கூறுங்கள்?

7. வேறு ஏதாவது நீங்கள் எங்களுக்குச் சொல்ல விரும்புகின்றீர்களா?
   அதைக் (அவற்றைக்) கூறுங்கள்?

நன்றி.